

# தேனி நாடாளுமன்றத் தொகுதி

## தேசிய ஜனநாயகக் கூட்டணியின் வெற்றி வேட்பாளர்

## திரு.டிடிவி தினகரன் அவர்களுக்கு

வாக்களிப்பீர்

**குக்கர் சின்னம்**



தேர்தல் நாள்

**19-04-2024**

## தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கான பிரத்யேக வாக்குறுதிகள்

**உங்களோடு இருப்பேன்... உங்களுக்காகவே உழைப்பேன்...**



# நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 2024

## தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கான பிரத்யேக வாக்குறுதிகள்



- முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டம் உச்சநீதிமன்ற தீர்ப்பின்படி 152 அடியாக உயர்த்தப்பட்டு மாநில உரிமையையும் விவசாயிகளின் நலனையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மத்திய அரசின் சிறப்பு நிதியுதவியை பெற்று வைகை அணையில் முறையான தூர்வாரும் பணிகள் மேற்கொள்ள வழிவகை செய்யப்படும்.
- கேந்திரிய வித்யாலயா பள்ளியின் செயல்பாடுகளை உடனடியாக தொடங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- மத்திய அரசின் **PM Shri** மற்றும் நவோதயா ( **Navodaya** ) பள்ளிகளை தேனி மாவட்டத்திற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- மத்திய அரசின் உதான் ( **Udaan** ) திட்டத்தின் கீழ் தேனியில் விமான நிலையம் அமைக்கத் தேவையான அனைத்து விதமான முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.
- 1984 ஆம் ஆண்டில் அப்போதைய முதலமைச்சர் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் அவர்களால் அடிக்கல் நாட்டப்பட்ட ஆண்டிபட்டி - தெப்பம்பட்டி - திப்பரேவு அணைத்திட்டத்திற்கு புத்துயிர் அளிக்கப்பட்டு விரைவில் செயல்பாட்டிற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- உசிலம்பட்டியில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மற்றும் மூக்கையாத்தேவர் சிலைகளுக்கு அருகில் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சிலை நிறுவ நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் புதிய தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டு புதிய வேலைவாய்ப்புகள் உருவாக்க முயற்சிகள் எடுக்கப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசு மற்றும் தனியார் கட்டடங்களிலும் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஒவ்வொரு ஊராட்சியிலும் மக்கள் மற்றும் அரசு அதிகாரிகள் அடங்கிய ஊராட்சி நலக்குழு அமைக்கப்படும். அரசின் திட்டங்கள் மக்களை சென்றடைவது அக்குழு மூலமாக உறுதி செய்யப்படும்.
- கிராமப்புறங்களில் சுயதொழில் தொடங்கும் பெண்களுக்கு கூட்டுறவு வங்கிகள் மூலமாக வட்டியில்லா கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படும்.
- அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் மகளிரின் புகார்களை விசாரிக்க தனி அமைப்பு உருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும். பெறப்படும் புகார்கள் குறித்து ஒருவாரத்திற்குள் நடவடிக்கை எடுப்பது உறுதி செய்யப்படும்.

## கல்வி

- தேனியில் உலகத்தரம் வாய்ந்த மத்தியப் பல்கலைக்கழகம் ( **Central University** ) அமைக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.
- தேனி மாவட்டத்தில் மத்திய அரசின் கல்வி நிறுவனமான இந்திய தொழில்நுட்ப கழகம் ( **IIT** ) நிறுவ முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- மத்திய அரசின் உதவியோடு தேனியில் சித்தா, ஆயுர்வேதக் கல்லூரி அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- கல்விக்காக மத்திய அரசு வழங்கும் நிதியுதவி முழுமையாக மாணவ, மாணவியர்களிடம் சென்றடைவது உறுதி செய்யப்படும்.
- எஸ்.சி மற்றும் எஸ்.டி மாணவ, மாணவியர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் உதவித்தொகையில் பாரபட்சம் காட்டுவது முற்றிலுமாக தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- கல்விக்கடன் கோரி விண்ணப்பிக்கும் மாணவ, மாணவியர்கள் அனைவருக்கும் வங்கிகளின் உதவியோடு எளிதில் கல்விக்கடன் பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.

- சோழவந்தான் மற்றும் கடமலை பகுதியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும். ஏற்கனவே உள்ள அரசு கல்லூரிகளின் தரம் உயர்த்தவும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அரசு மற்றும் அரசு உதவிபெறும் கல்லூரிகளில் இலவச Wi-Fi வசதி ஏற்படுத்தி தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து அரசுப் பள்ளிகளின் தரம் மற்றும் கல்வித்தரம் உயர்த்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் அதிநவீன வசதிகளுடன் கூடிய பொது நூலகங்கள் கட்டித்தரப்படும்.

## விவசாயம்

- விவசாயிகளின் பாசன வசதிக்கேற்ப வைகை அணையில் இருந்து உரிய நேரத்தில் நீர் திறக்கப்படுவது உறுதி செய்யப்படும்.
- கொரோனோ காலகட்டத்தில் விவசாயிகள் பெற்ற வங்கிக் கடன்களுக்கான வட்டியை முழுமையாக தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
- மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதியில் அடுக்கத்திற்கும் ஈச்சமலைக்கும் இடையே உள்ள வவ்வால்துறையில் புதிய அணை கட்டி எண்டபுளி பஞ்சாயத்தில் உள்ள சுமார் 3000 ஏக்கர் பாசன வசதி பெறவும், குடிநீர் தட்டுப்பாட்டை போக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆக்கிரமிப்பில் உள்ள அனைத்து நீர்நிலைகளும் முழுமையாக மீட்கப்பட்டு முறையாக தூர்வாரப்பட்டு பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- மா மற்றும் தென்னை விவசாயிகளுக்கு மானிய விலையில் உரம் வழங்கவும், திராட்சை, ஏலக்காய்க்கு விவசாயிகளின் ஆலோசனையைப் பெற்று அதற்கு உரிய விலை நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி மாவட்டத்தில் இயற்கை விவசாயம் ஊக்குவிக்கப்படுவதோடு, முழு மானியத்துடன் கூடிய இயற்கை உரங்களும் விநியோகம் செய்ய தேவையான முயற்சிகள் எடுக்கப்படும்.
- முருங்கைக்காய் மற்றும் முருங்கைக் கீரை ஏற்றுமதிக்கு முன்னுரிமை அளிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- சோழவந்தான் உட்பட நீர் உற்பத்தியாகும் இடங்களில் தடுப்பணைகள் கட்டி விவசாயிகளின் தண்ணீர் தேவை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.
- உசிலம்பட்டி 58 கால்வாய்த் திட்டத்திற்கு உரிய அரசாணை பிறப்பித்து, பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது உறுதி செய்யப்படும்.
- சோழவந்தான் உட்பட தேனி நாடாளுமன்றத்தில் அதிகளவு நெல்சாகுபடி செய்யப்படும் இடங்களில் விவசாயிகளின் கோரிக்கைக்கு ஏற்ப நிரந்தர நெல்கொள்முதல் நிலையங்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் காய்கறிகள் மற்றும் பழங்கள் பதப்படுத்தும் நிலையங்கள் அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

## தொழில்வளர்ச்சி

- பெரியகுளம், ஆண்டிபட்டி மற்றும் போடி நாயக்கனூர் பகுதிகளில் மாம்பழம் பதப்படுத்துதல் மற்றும் மாம்பழக் கூழ் தொழிற்சாலைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

# நாடாளுமன்ற மக்களவைத் தேர்தல் 2024
# தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கான பிரத்யேக வாக்குறுதிகள்

- ஆண்டிபட்டி ஜக்கம்பட்டியில் பாதியில் நிறுத்தப்பட்டிருக்கும் நெசவாளர் பூங்கா அமைக்கும் பணியை மீண்டும் தொடங்கி விரைவில் நெசவாளர் பயன்பாட்டிற்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும்.
- சிறு,குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான மின்சாரக் கட்டணத்தை குறைக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- தேனி நாடாளுமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் தொடங்கப்படும் புதிய தொழிற்சாலைகளுக்கு மத்திய அரசின் மூலம் கடன் உதவி பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- ஆயத்த ஆடைகள் தயாரிப்புக்கு தேவையான மூலப் பொருட்களுக்கு மத்திய அரசு வழங்கும் 70 சதவிகிதம் மானியத்தை உடனடியாக பெற்றுத் தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- உத்தமபாளையம், சின்னமனூர் பகுதிகளில் மல்லிகைப்பூ விவசாயிகள் பயன்பெறும் வகையில் வாசனை திரவிய தொழிற்சாலை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## போக்குவரத்து

- தென்மாவட்ட மக்களின் நீண்டநாள் கோரிக்கையான திண்டுக்கல்-சபரிமலை ரயில் போக்குவரத்து சேவையை தொடங்குவதற்கு தேவையான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.
- சென்னை — போடி ரயில் சேவையை தினசரி இயக்க தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- மதுரை — போடிநாயக்கனூர் வரையிலான ரயில் போக்குவரத்தை கூடலூர் வரை நீட்டிக்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.
- போடி முதல் மூணாறு வரையிலான சாலைப் போக்குவரத்தை அகலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.
- போடி முதல் பெங்களூரு வரை எக்ஸ்பிரஸ் ரயில் சேவையை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- தமிழகம் — கேரள எல்லையில் உள்ள கண்ணகி கோயிலுக்கு முறையான சாலைவசதி ஏற்படுத்தித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- பாண்டியன் மற்றும் திருப்பதி எக்ஸ்பிரஸ் ரயில்கள் சோழவந்தானில் நின்று செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.
- வனத்துறையின் அனுமதியை பெற்று வருசநாடு பிரதான சாலையில் ஓட்டனை முதல் தர்மராஜபுரம் வரை வைகை ஆற்றின் மீது புதிய பாலம் கட்டும்பணி தொடங்கப்படும்.
- உசிலம்பட்டி புறவழிச்சாலைக்கான பணிகளை உடனடியாக தொடங்க மத்திய அரசிடம் வலியுறுத்தப்படும்.
- சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட வாடிப்பட்டியில் ரயில் நிலைய மேம்பாலம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

## அடிப்படை வசதிகள்

- அனைத்து ஆரம்ப சுகாதார நிலையங்களும் மேம்படுத்தப்பட்டு 24 மணி நேரமும் சிகிச்சை வழங்க ஏற்பாடு செய்யப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் கூட்டுக் குடிநீர் திட்டம் செயல்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- அனைத்து கிராமங்களிலும் சுத்தமான குடிநீர், பேருந்து வசதி, சாலைவசதி, கழிப்பறைகள், திடக்கழிவு மேலாண்மை வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
- நியாய விலைக்கடைகள் இல்லாத கிராமங்களில் புதிய நியாய விலைக்கடைகள் அமைத்து தர நடவடிக்கை எடுக்கப்படும்.

- அனைத்து ஊராட்சிகளிலும் தலா இரண்டு இலவச அமரர் ஊர்தி சேவை வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- கிராமப்புறங்களுக்கு தேவையான தெருவிளக்குகள், பேருந்து நிறுத்தங்கள், மயான வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும்.
- மேகமலை வனப்பகுதியில் வசித்துவரும் பொதுமக்களுக்கு மின்சாரம், சாலை, குடிநீர் உள்ளிட்ட அனைத்துவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படும்.
- மேகமலை, தும்மக்குண்டு மற்றும் வாலிப்பாறை பகுதிகளில் பூர்வகுடிகளாக வாழ்ந்துவரும் 18 கிராம மக்களை வெளியேற்ற முயற்சிக்கும் வனத்துறையின் நடவடிக்கை தடுத்து நிறுத்தப்பட்டு, மத்திய அரசின் உதவியுடன் அவர்கள் அங்கேயே வசிக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- மலைப்பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு தொலைத் தொடர்பு வசதியை ஏற்படுத்தி தரும் வகையில் கூடுதல் செல்போன் டவர்கள் **(Cell Phone Towers)** அமைத்துத் தர நடவடிக்கை எடுக்கப்படும்.
- தேனி மாவட்டத்தில் நிலவும் மின் தட்டுப்பாட்டை போக்கவும், தடையற்ற மின்சாரம் வழங்கவும் தேவையான இடங்களில் துணைமின் நிலையங்கள் அமைத்து தர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு

- மத்திய, மாநில அரசுப் பணிகளுக்கான போட்டித் தேர்வினை கிராமப்புற இளைஞர்கள் எளிதாக எதிர்கொள்ளும் வகையில் இலவச பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும்.
- தேனி நாடாளுமன்றத் தொகுதிக்குட்பட்ட 6 சட்டமன்றத் தொகுதிகளிலும் அனைத்து வசதிகளுடன் கூடிய விளையாட்டு மைதானங்கள் உருவாக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும்.
- இளைஞர்கள், விளையாட்டு வீரர்களின் நலனுக்காக அனைத்து ஊராட்சிகளிலும் உடற்பயிற்சி கூடம் அமைத்துத் தரப்படும்.
- கிராமப்புற விளையாட்டு வீரர்களை ஊக்குவிக்கும் விதமாக வருடம்தோறும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும்.
- மாநில, தேசிய அளவில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் விளையாட்டு வீரர்களுக்கு சிறப்பு பயிற்சியுடன் ஊக்கத்தொகையும் வழங்கப்படும்.

## மாற்றுத்திறனாளிகள் நலன்

- அரசு மற்றும் தனியார் அலுவலகங்களில் எளிதான முறையில் வந்துசெல்ல மாற்றுத்திறனாளிகளுக்குத் தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் செய்து கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- 100 நாள் வேலைத்திட்டத்தில் தகுதிவாய்ந்த மாற்றுத்திறனாளிகள் அனைவருக்கும் பணி வழங்க மத்திய அரசின் மூலம் நடவடிக்கை எடுக்கப்படும்.

## ஆன்மீகம்

- உலகப்புகழ் பெற்ற வீரபாண்டி ஸ்ரீ கௌமாரியம்மன் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு தங்கும் வசதியுடன் கூடிய புதிய அரங்கம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.
- நீண்ட காலமாக குடமுழுக்கு நடத்தப்படாமல் இருக்கும் கோயில்கள் புதுப்பிக்கப்பட்டு குடமுழுக்கு நடத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- சுருளி ஆன்மீகத் தலம் மேம்படுத்தப்படும். மலையேறும் பக்தர்களுக்கான கட்டணம் மற்றும் குளிப்பதற்கான கட்டணம் முழுமையாக ரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

## சுற்றுலா

- கண்ணகி கோட்டம் முழுமையாக தமிழ்நாட்டின் கட்டுப்பாட்டில் இருப்பதை உறுதி செய்து நவீன வசதிகளுடன் கூடிய முக்கிய சுற்றுலாத்தளமாக மாற்ற நடவடிக்கை எடுக்கப்படும்.
- வைகை அணையில் உள்ள பூங்கா முறையாக பராமரிக்கப்பட்டு பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகளின் பயன்பாட்டிற்கு கொண்டு வர முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- சோத்துப்பாறை, மஞ்சளாறு, கும்பக்கரை, தேக்கடி உள்ளிட்ட இடங்களில் கூடுதல் வசதிகள் ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.
- மேகமலை பகுதியை தென் தமிழகத்தின் முக்கிய சுற்றுலாத்தளமாக மாற்றுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.
- சின்ன சுருளி அருவி அமைந்துள்ள பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேம்படுத்தப்பட்டு சுற்றுலாத்தளமாக அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.




**உங்களோடு இருப்பேன்... உங்களுக்காகவே உழைப்பேன்...**

**தேர்தல் நாள் 19-04-2024**